பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

15 04 2025 6 30

செவ்வாய்க்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- உலகத் தரத்திலான மருத்துவ சேவை அனைத்து தரப்பு மக்களுக்கும் கிடைப்பதற்கான உறுதிப்பாட்டுடன் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.
- குழந்தை கடத்தல் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை உச்சநீதிமன்றம் வெளியிட்டுள்ளது.
- தமிழகத்தில் பறிமுதல் செய்யப்பட்ட தாது மணலை மத்திய அரசின் அரிய வகை தாதுப் பொருட்கள் நிறுவனத்திடம் ஒப்படைக்க மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.
- கள்ளக்குறிச்சி விஷச்சாராய மரணம் குறித்த வழக்கு விசாரணை மூன்று மாதங்களுக்குள் முடிக்கப்படும் என்று மத்திய புலனாய்வுப் பிரிவு சென்னை உயர்நீதிமன்றத்தில் உறுதியளித்துள்ளது.
- ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பஞ்சாப் அணி - கொல்கத்தாவை எதிர்கொள்கிறது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

உலகத் தரத்திலான மருத்துவ சேவை நாட்டின் அனைத்து தரப்பு மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாக சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

உத்தராகண்ட் மாநிலம் ரிஷிகேஷில் உள்ள எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரியின் ஐந்தாவது பட்டமளிப்பு விழாவில் 434 பேருக்கு பட்டங்களை வழங்கி பேசிய அவர், மருத்துவ சேவை ஏழை எளிய மக்களுக்கு குறைந்த செலவில் கிடைக்கப்பெற வேண்டுமென்று கூறினார்.

நோயை குணப்படுத்துவது மட்டுமன்றி, நோய் தடுப்பு, மறுவாழ்வு போன்றவற்றிற்கான கட்டமைப்பையும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது 22 எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரிகள் மூலம் உயர்தர மருத்துவ சிகிச்சை அனைத்துத் தரப்பு மக்களுக்கும் வழங்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது நாடு முழுவதும் ஒரு லட்சத்து 75 ஆயித்துக்கும் மேற்பட்ட ஆயூஷ்மான் ஆரோக்கிய மையங்கள் செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

கடந்த பத்து ஆண்டுகளில் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 101 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்,

எம் பி பி எஸ் மருத்துவ படிப்புக்கான இடங்கள் 130 சதவீதமும், முதுநிலை மருந்துவ படிப்புக்கான இடங்கள் 138 சதவீதமும் அதிகரித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ரிஷிகேஷ் எய்ம்ஸ் மருந்துவமனையில் அணுசக்தி கதிரியக்க சிகிச்சை மையத்தில் நவீன ஸ்கேன் வசதி உள்ளிட்ட முக்கிய நவீன கட்டமைப்புகளையும் திரு ஜெ பி நட்டா இன்று திறந்து வைத்தார்.

[]<<<>>>[]

குழந்தை கடத்தல் தொடர்பான வழக்குகளை விசாரணை நீதிமன்றங்கள் ஆறு மாதத்திற்குள் முடிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கடுமையான வழிகாட்டு நெறிமுறைகளை உச்சநீதிமன்றம் இன்று வெளியிட்டுள்ளது.

உத்திரபிரதேசத்தைச் சேர்ந்த குழந்தை கடத்தல் தொடர்பான வழக்கை விசாரித்த நீதிபதிகள் திரு பர்த்திவாலா, திரு மகாதேவன் ஆகியோரைக் கொண்ட பெஞ்ச், உயர்நீதிமன்றங்கள், கீழமை நீதிமன்றங்களுக்கு வழக்குகளை குறித்த காலத்தில் முடிப்பதற்கான உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டுமென்று அறிவுறுத்தியது.

குழந்தை கடத்தல் தொடர்பான வழக்குகளை தினமும் விசாரித்து தாமதமின்றி நீதி கிடைக்க நடவடிக்கை வேண்டுமென்றும் அறிவுறுத்தியது.

குழந்தை கடத்தல் வழக்குகளில் ஜாமின் கோரி தாக்கல் செய்யப்படும் மனுக்களுக்கு முடிவெடுப்பதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

மருத்துவமனையிலிருந்து பிறந்த குழந்தை கடத்தப்பட்டால் அந்த மருத்துவமனையின் அங்கீகாரத்தை ரத்து செய்வதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

[]<<<>>>[]

நாள் ஒன்றுக்கு 100 கிலோமீட்டர் நெடுஞ்சாலை அமைக்கும் இலக்கை எட்டுவதற்கு முனைப்புடன் செயல்பட வேண்டுமென்று மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று அகில இந்திய நிர்வாக சங்கங்களின் கூட்டமைப்பு மாநாட்டில் உரையாற்றிய அவர், நாட்டின் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்று கூறினார்.

அடுத்த 18 மாதங்களுக்குள் அமெரிக்காவை மிஞ்சும் அளவுக்கு தினசரி நெடுஞ்சாலை அமைக்கும் பணியை இந்தியா மேற்கொள்ளும் என்றும் திரு நிதின்கட்கரி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தேசிய திருநங்யைர் தினத்தையொட்டி முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் திருநங்கைகளுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் நாட்டிலேயே முதல் முதலாக அவர்களுக்கென நல வாரியம் தமிழகத்தில் அமைக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

கட்டணமில்லா பேருந்து பயணம், கல்விச் செலவு, புதுமைப்பெண் திட்டம், ஊாக்காவல்படையில் பணி உள்ளிட்டவை திருநங்கையருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

திருநங்கையருக்கு அங்கீகாரம் கிடைக்கவும், அவர்களின் கல்வி வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் உறுதியேற்போம் என்று திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் பறிமுதல் செய்யப்பட்ட தாது மணலை மத்திய அரசின் அரிய வகை தாதுப் பொருட்கள் நிறுவனத்திடம் ஒப்படைக்க மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய தென் கடலோர மாவட்டங்களில் தனியார் நிறுவனங்களால் சட்டவிரோதமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு கோடியே 40 லட்சம் டன் தாது மணல் மத்திய அரசின் இந்திய அரிய மணல் நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்கான உத்தரவை மாநில அரசின் கனிம வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு பணீந்திரரெட்டி பிறப்பித்துள்ளார்.

தென் மாவட்ட கடலோரப் பகுதிகளிலிருந்து பறிமுதல் செய்யப்பட்ட இந்த தாது மணல் பல்வேறு கிடங்குகள், தொழிற்சாலைகள் மற்றும் சுரங்கப் பகுதிகளில் வைக்கப்பட்டுள்ளது.

இவற்றை எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்துச் செல்வு உட்பட விலை நிர்ணய நடைமுறைகள் முடிந்த பிறகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி மத்திய அரசு நிறுவனத்துக்கு வழங்கப்படும் என்று அவர் அந்த உத்தரவில் தொவித்துள்ளார்.

இப்பகுதியில் தாது மணல் எடுக்க தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உரிமத்தை மத்திய அரசு கடந்த 2019-ஆம் ஆண்டு ரத்து செய்தது.

**[]<<<>>>[]**

கள்ளக்குறிச்சி விஷச்சாராய மரணம் குறித்த வழக்கு விசாரணை மூன்று மாதங்களுக்குள் முடிக்கப்படும் என்றும மத்திய புலனாய்வுப் பிரிவு இன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள் தாக்கல் செய்த ஜாமின் மனுக்கள் இன்று நீதிபதி திரு சுந்தர் மோகன் முன்பு விசாரணைக்கு வந்தபோது சிபிஐ தரப்பில் இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டது.

இதுவரை இந்த வழக்கில் 21 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்க்ப்பட்டது.

விரைந்து விசாரணை மேற்கொண்டு எத்தனை பேர் இந்த வழக்கில் தொடர்புடையவர்கள் என்பது குறித்து சிபிஐ பதிலளிக்க வேண்டுமென்று நீதிபதி உத்தரவிட்டார்.

ஜாமின் மனுக்கள் மீதான விசாரணை இம்மாதம் 17-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.,

**[]<<<>>>[]**

கோடைக்காலத்தை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்டத்தில் மண்பானை உற்பத்தி மற்றும் விற்பனை அதிகரித்துள்ளது.

கோடை வெப்பத்தை தணிப்பதற்காக மக்கள் அதிக அளவில் மண்பானையை பயன்படுத்துவதால் அதன் தேவை அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - லஷ்மணன் ) --- 36 செகண்ட்*

**[]<<<>>>[]**

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு நகராட்சி மற்றும் மல்லசமுத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் ஐந்து கோடியே 46 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து ஆட்சியிர் திருமதி உமா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

**[]<<<>>>[]**

தஞ்சாவூர் மாவட்டத்தில் தீ விபத்து இல்லா இந்தியாவை உருவாக்குவோம் என்பதை வலியுறுத்தி தீயணைப்புத் துறை சார்பில் இன்று விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

**[]<<<>>>[]**

தூத்துக்குடி மாவட்டத்தில் பெற்றோரை இழந்த குழந்தைகள், பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகள் தட்டப்பாறை, ஸ்ரீவைகுண்டம் அரசு இல்லங்களில் தங்கி கல்வி பயிலலாம் என ஆட்சியர் திரு இளம்பகவத் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே உள்ள வரதமாநதியிலிருந்து ஒட்டன்சத்திரம் தொகுதிக்கு உபரிநீர் வாய்க்கால் மூலம் தண்ணீர் கொண்டு செல்லும் திட்டத்திற்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

[]<<<>>>[]

பிரசித்திபெற்ற திருச்சி சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில் சித்திரைத் தேர் திருவிழா இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது. லட்சக்கணக்கான பக்தர்கள் இதில் பங்கேற்றனர்.

[]<<<>>>[]

தருமபுரியில் மத்திய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய புள்ளியியல் அலுவலகத்தின் 75-வது ஆண்டு விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.,

[]<<<>>>[]

திருப்பூர் மாவட்டம் அவிநாசி அருகே அரிசி ஆலையில் பதுக்கி வைத்திருந்த 24 டன் ரேசன் அரிசியை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

[]<<<>>>[]

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி அருகே மாவட்ட தலைமை அருசு மருத்துவமனை சார்பில் ரத்ததான முகாம் இன்று நடைபெற்றது.

[]<<<>>>[]

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பஞ்சாப் அணி - கொல்கத்தாவை எதிர்கொள்கிறது.

இப்போட்டி சண்டிகரில் இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

இந்திய பளுதூக்கும் சம்மேளனத்தின் தடகள ஆணைய தலைவராக மீராபாய் சானு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

துணைத்தலைவராக சதிஷ்குமார் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.